செ.வெ.எண்: 66 நாள்: 29.07.2019

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் தலைமையில் இன்று ( 29.07.2019) நடைபெற்றது.**

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத்துறை சார்பாக தலா ரூ.5,018- மதிப்பில் மொத்தம் 10- பயனாளிகளுக்கு ரூ. 50,180 மதிப்பிலான விலையில்லா சலவைப்பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று வழங்கினார்.**

**மாநில அளவில் நடைபெற்ற கையுந்து பந்து போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்று கோப்பை மற்றும் பதக்கங்கள் பெற்ற ஒசூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி சேர்ந்த மாணவியர்களுக்கு - மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வாழ்த்து.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (29.07.2019 ) நடைபெற்றது. இக்குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் குடிநீர் வசதி, மின்வசதி, பட்டா வேண்டியும், கல்வி உதவித் தொகை, ஓய்வூதியத் தொகை, இலவச தையல் எந்திரம், சலவைப் பெட்டி, வேண்டியும் மற்றும் சாலை வசதி வேண்டியும், மின் இணைப்பு, வீட்டுமனைப்பட்டா, பல்வேறு கோரிக்கைகள் உள்ளிட்ட என மொத்தம் 331- மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கினார்.

தொடர்ந்து ஈரோடு நஞ்சனாபுரம் கொங்கு கலை அறிவியியல் கல்லூரியில் மாநில அளவில் நடைபெற்ற கையுந்து பந்து போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்று கோப்பை மற்றும் பதக்கங்கள் பெற்ற ஒசூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி சேர்ந்த மாணவியர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

மேலும் ஊத்தங்கரை வட்டம் நொச்சப்பட்டி கிராமத்தை சார்ந்த கல்பனா வருவாய்த்துறையில் பணியாற்றி பணிகாலத்தில் இறந்தமையால் அவரது மகன் திரு.முகிலரசன் என்பவருக்கு கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் பணிக்கான பணி நியமன ஆணையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத்துறை சார்பாக தலா ரூ.5,018- மதிப்பில் மொத்தம் 10- பயனாளிகளுக்கு ரூ. 50,180 மதிப்பிலான விலையில்லா சலவைப்பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி, தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.குணசேகரன், மாவட்ட ஆதிதிராவிடர் நலத் துறை அலுவலர் திரு.சேதுராமலிங்கம், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.சந்திரசேகர், உதவி ஆணையர் ( ஆயம்) திரு.முரளி, மாவட்ட பிற்படுத்தப்பட்டடோர் நலத்துறை அலுவலர் திரு. அமீர்பாஷா, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் திருமதி.வளர்மதி, தலைமையாசிரியர் திருமதி.லதா, பயிற்சியாளர்கள் திரு.தாயுமானவன், திரு. மாணிக்கவசாகம், மாவட்ட கபடி குழு தலைவர் திரு.லட்சுமையா, மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: - செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**கிருஷ்ணகிரி.**